**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 14/2022**

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 மதியழகன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 25.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீகமாக என் மூதாதையர், என் தகப்பனார், தற்போது நான் குத்தகைக்கு ஓட்டி வருகிறோம் என்றால் சரிதான். இவ்வழக்கு 2020-2021 காலகட்டத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுமார் 50 வருட காலமாக ஒரே குத்தகை தான் வசூல் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். 17.07.2021 ல் வாதி தன்னிடம் அனுமதி பெற்று சாகுபடி செய்யும்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். அதை நான் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைதான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். நான் மேற்படி அறிவிப்பிற்கு பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. அதன்பின்னிட்டு தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக ஒரு நிலத்தை சாகுபடி செய்யும்பொழுது பாசன வசதி, வடிகால் வசதி மற்றும் இயற்கை இடர்பாடுகள் இல்லாமல் இருந்தால் நன்கு சாகுபடி செய்யலாம் என்றால் சரிதான்.

2) என்னுடைய அனுபவத்தில் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். வாதி டிரஸ்ட் குளித்தலை வட்டத்தில் பல்வேறு இடத்தில் தங்களது இடங்களை குத்தகைக்கு விட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என் பாட்டனாரும் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். வாதி தனது நிலங்களுக்கு குறைந்தபட்ச குத்தகையே வசூல் செய்து வந்தது என்றும், ஆனால் நாங்கள் நன்கு விவசாயம் செய்து வருகிறோம் என்றும், எனவே குறைந்தபட்ச குத்தகையாக 1 செண்ட்க்கு ரூ.100/- மட்டும் நிர்ணயம் செய்ய கேட்டிருக்கிறார் என்றால் சரியல்ல. வருடத்திற்கு ஒரு ஏக்கரில் சுமார் 1100 வாழை பயிரிடலாம் என்றால் சரிதான். அதில் 900 வாழையை வெட்டலாம் என்றால் சரியல்ல. சுமார் 800 வாழையை வெட்டலாம். மற்றவை சேதம் அடைந்துவிடும். வாழை மரத்தில் வாழை இலை மற்றும் வாழைப்பூ ஆகியவற்றை கணிசமான தொகைக்கு விற்பனை செய்யலாம் என்றால் விசேஷ நாட்களில் மட்டும் வாழை இலை விற்பனையாகும்.வாழைப்பூ மாட்டுத்தீவனமாகதான் பயன்படுத்துவோம்.

3) வாழை இலை 1 கட்டு சுமார் ரூ.500-க்கு மேல் விற்பனையாகும் என்றால் சரியல்ல. ரூ.300-க்கு போகும். ஒரு ஏக்கரில் வாழையிலை மற்றும் பூவை சுமார் 20,000 முதல் 30,000 ரூபாய்க்கு விற்பனை செய்யலாம் என்றால் சரியல்ல. என் முன்னோர்கள் தாவா இடத்தில் நெல் சாகுபடி செய்து ஒருபோகத்திற்கு பத்து களம் மற்றும் இருபது களம் நெல்

கொடுப்பார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. என்ன வாழை பயிர் செய்துள்ளேன் என்றால் கற்பூரவள்ளி பயிர்செய்துள்ளேன். ஒரு வாழைத்தார் சராசரியாக ரூ.500 க்கு விற்பனையாகும் என்றால் சரியல்ல. ரூ.350-க்கு விற்பனையாகும். நான் தாவா சொத்தில் இருந்து அதிகப்படியான பலன்களை பெற்றுக்கொண்டு உரிமையாளருக்கு மிகவும் குறைவான தொகையையே குத்தகையாக செலுத்துகிறேன் என்றும், பொதுவாக ஒரு ஏக்கருக்கு ரூ.25,000 முதல் ரூ.40000 வரை குத்தகை பெறப்படுகிறது என்றும் சொன்னால் சரியல்ல. எனவே வாதி இவ்வழக்கில் கோரியுள்ளபடி குத்தகைத்தொகை நிர்ணயம் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.252/2010 வழக்கில் 2008 ம் ஆண்டிற்குரிய குத்தகை தொகை ரூ.50 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது வாதி 2020-2021 வருடத்திற்கு சுமார் 10 வருடம் கழித்து ரூ.100 என விலை நிர்ணயம் கேட்பது நியாயமானது என்பதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**